M- C. N

★ இரு மாணவர்கள் காயம்

# பலாலியிலிருந்து இரவு நேரம் ஷெல்தாக்கு


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 159 பிரசோற்பத்தி சித்திரை 23 (06-05-1991) திங்கள்


## மூளாய்ப் பகுதியில் வெடித்தன

பலாலியிலிருந்து நேற்று முன்தினம் இரவு மூளாய்ப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் இரு மாணவர்கள் காயமடைந்தனர். இத்தன் கேணி பிள்ளையார்தையில் உள்ள கிருஷ்ணர் சதாசிவம் என்பவரது வீட்டுவளவில் ஒரு ஷெல் விழுந்து வெடித்ததால் பரமநாதன் சிவ சுப்பிரமணியம் (16), திருநீலகண்டசிவம் குணராசா (13) ஆகிய மாணவர்கள் காயமடைந்தனர். இச்சம்பவத்தையடுத்து இரவு நேரம் மக்கள் கோயில்களில் தஞ்சம் புகுந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. மூன்று ஷெல்கள் ஏவப்பட்டதாகவும் அவற்றில் இரண்டு மூளாய்ப்பகுதியில் விழுந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. 12

# புலிகளின் அதிரடித்தாக்குதலால்

# வவுனியாவில் 20 படையினர் பலி!

## இராணுவத்தினரின் சடலங்களும்

## பெருமளவு ஆயுதங்களும் மீட்கப்பட்டன

வவுனியா கோழியக்குளம் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடி தாக்குதலில் 20 படையினர் பலியாகினர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் கோழியாக்குளம் பகுதியில் நடைபெற்ற இந்த அதிரடித் தாக்குதலில் 20 படையினர் கொல்லப்பட்டனர் பலர்காயமடைந்தனர்.

பலியான சிப்பாய்களின் 16 சடலங்களையும் ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

படையினரிடம் மீட்கப்பட்ட ஆயுதங்கள்:

★ ஜி பி. எம். ஜி - 1

✱ மெஷின்க சுடுகுழல் - 1

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இடம்பெயர்ந்தவர்களுக்கு மனநோய் பீடித்துள்ளது

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துவந்தவர்களில் சிலருக்கு மனநோய் பீடித்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் பத்துப்பேர் சிகிச்சைக்கு வந்ததாகவும், இருவர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகளினால் இவர்களுக்கு இந்த நோய் பீடித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 74

## முன்னாள் ஐ. தே. க அமைச்சர் சுயேட்சை வேட்பாளருக்கு ஆதரவு

முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசிய கட்சியின் புத்தளம் தொகுதியின் முன்னாள் எம் பியுமான நைனா மரிக்கார் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களுக்காக பிரசாரம் செய்து வருகிறார்.

புத்தளம் நகரசபை, கல்பிட்டி பிரதேச சபைகளுக்கான தேர்தலில் போட்டி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வடகிழக்கு அரச ஆட்சேர்ப்பு அதிகாரிகள் மறுப்பு

வடக்குக் கிழக்கிலுள்ள அரச நிறுவனங்களுக்கு புதிய ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்குக் கொழும்பு அதிகாரிகள் மறுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்குக் கிழக்கிலுள்ள பல அரச திணைக்களங்களில் பல ஒய்வு பெற்றதால் அவற்றின் செயற்பாடுகள் பாதிப்படைவதாக அதிகாரி ஒருவர் தெரி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கறுப்புக்கண்ணாடி வாகனங்கள் பாவனைக்குத் தடைவருகிறது

வர்ணம் பூசப்பட்ட கண்ணாடிகளைக் கொண்ட வாகனங்களின் உள்ளே இருக்கும் நபர் வெளியே தெரியாத வகையில் டிக்கர், விளம்பரங்களை கண்ணாடிகளில் ஒட்டுவதற்கு பொலிஸார் தடைவிதித்துள்ளனர்.

ஒரு குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் இந்த வாகனங்கள் அவர்களின் பாதுகாப்புக்கருதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ரக வாகனங்களை இறக்குமதி செய்வதை தடைசெய்யுமாறும் சுங்கப்பகுதிக்கு பாதுகாப்பு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது. 83

## 5 மாலுமிகள் பலியாம்

நேற்று முன்தினம் அதிகாலை வல்வெட்டித்துறை கடல்பகுதியில் கடற்படைக் கப்பல் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் 5 கடற்படை மாலுமிகள் பலியானதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

### மரண தண்டனை

அத்தியடி பருத்தித்துறையைச் சேர்ந்த ஜாக (வே விஜகுமார்) என்ற இயக்கப் போராளி பாலியல் நடவடிக்கை, ஊழல் ஆகிய சமூக விரோதச் செயலில் ஈடுபட்டமைக்காக பருத்தித்துறையில் வைத்து இவருக்கு விடுதலைப் புலிகள் மரண தண்டனை விதித்தனர்.

● ●

திருமலையில் காட்டிக் கொடுக்கும் சமூகவிரோதச் செயலில் ஈடுபட்ட கோணலிங்கம் சுசீலா (18) அந்தோனி கந்தசாமி (40) ஆகியோருக்கு விடுதலைப்புலிகள் 58 ஆம் கட்டைப்பகுதியில் வைத்து மரணதண்டனை விதித்தனர். 71

## கடவான காட்டுப்பகுதியில்

## புலிகள் - இராணுவம் மோதல்

நேற்று முன்தினம் காலை திருமலை கடவான காட்டுப் பகுதியில் உள்ள புலிகளின் முகாமை முற்றுகையிடச் சென்ற படையினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தினர். படையினர் மிதிவெடியில் சிக்கிய போதும் தொடர்ந்து முன்னேறி வந்தனர். இவர்களுக்கு உதவியாக நான்கு ஹெலிகள் தாக்குதல் நடாத்தின.

இப்பகுதியில் நடைபெற்ற

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சமரசப் பேச்சுகளுக்காக ஜனாதிபதி - தொண்டா சந்திப்பு

சமரசப்பேச்சுகளை மீண்டும் அரசு ஆரம்பிப்பதற்கான முன் நடவடிக்கையில் உல்லாசப்பயணத்துறை அமைச்சர் தொண்டமான் மும்முரமாக ஈடுபடுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் தொண்டமான் கடந்த சில தினங்களாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்திவருகிறாராம்.

## 2 லட்சம் இலங்கையருக்கு மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு

குவைத், சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் இரண்டு லட்சம் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு இந்த நாடுகளின் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக உயர்மட்டக்குழுவொன்று விரைவில்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஆற்றுப் பள்ளத்தாக்குச் சபை கலைக்கப்படவுள்ளது

காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சின் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை கலைக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இந்தச் சபைக்கு சொந்தமான பொருள்கள், வாகனங்களை விற்பனை செய்வதற்கு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் மாவட்டத்தில் 'கண்நோய்' வேகமாகப் பரவுகின்றது

யாழ் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 'கண்நோய்' வேகமாகப் பரவி வருவதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை 'கண்நோய்' சன்மார்க்க மகாவித்தியாலய அகதி முகாமில் பலரைப் பீடித்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கடும் வெப்பம் காரணமாகவே 'இந்நோய்' பரவுவதாகக் கூறப்படுகிறது.

'கண்நோய்' பீடிக்கப்பட்டுள்ள அகதி முகாமில் அதனைக்கட்டுப் படுத்துவதற்கான நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர். (70)

# இன்னமும் ஒரு தடவையே தேர்தலில் போட்டியிடுவேன்

இன்னும் ஒரு முறையே தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக ஜனாதிபதி பிரேமதாஸ நேற்றில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

என்போன்றவர்களுக்கு உதவிய எம் தலைவர்கள் இட்ட அத்திவாரத்தை மேலும் பலம் பெறச்செய்வது எனது கடமை என்று கூறிய ஜனாதிபதி எதிர்க்கட்சியினரின் கூட்டுச் சரிவராது

— 4 ஆம் பக்கம் பார்க்க

# அரச பயங்கரவாதத்தை எதிர்த்தே புலிகளின் ஆயுதப்போராட்டம் ஆரம்பித்தது

விடுதலைப் புலிகள் வன்முறைப் போராட்டத்தை கைவிடுவதாக உறுதிமொழி அளிக்க வேண்டும் என பிரேமதாச ஒரு புதிய நிபந்தனையை விதிக்கின்றார். ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்ற பழைய நிபந்தனை புதிய வடிவத்தில் நெகிழ்த்தப்பட்டிருக்கின்றது.

ஆனால் உண்மையில் வன்முறையை யார் கைவிடவேண்டும்? புலிகளா? அரசா?

இவ்வாறு புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள் குரல் -22' இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுத வடிவத்திலான புலிகளின் வன்முறைப் போராட்டம் அரச பயங்கரவாத வன்முறையின் எதிர் வினையாகவே தோற்றம் கொண்டது என்பது வரலாற்று உண்மை. ஒடுக்கு முறையாளரின் அநீதியான பிற்போக்கான வன்முறைக்கு சவாலாகவே விடுதலைப் புலிகளின் புரட்சிகரமான தர்மத்தை வேண்டிய போராட்டம் ஆரம்பமானது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## எள்ளு அறுவடை ஆரம்பம்

வலி மேற்குப் பிரிவின் வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், பொன்னாலை ஆகிய இடங்களில் தற்சமயம் எள்ளு அறுவடை நடைபெறுகிறது. கடந்த வருடங்களைவிட இவ்வருடம் அதிக விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இதே சமயம் பொன்னாலைப் பகுதியில் குரங்கள் பயிரிட்டவர்களது காணிகளிலிருந்து குரங்கள் பயிர் களவு போவதாகவும் விவசாயிகள் கவலைதெரிவிக்கின்றனர். ப-1

## பலாலியில் இருந்து பொன்னாலைநோக்கிஷெல்

நேற்று இரவு 8 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட மூன்று ஆட்லறி ஷெல்கள் பொன்னாலைச் சந்திக் கருகாமையிலும், மூளாய் வயல் வெளியிலும் விழுந்து வெடித்தன.

இதேவேளை காரைநகர் வலந்தலைப் பகுதியிலிருந்து நேற்றுப்பகல் அடிக்கடி ஷெல் தாக்குதல் நடைபெற்றன. இந்த ஷெல்கள் பொன்னாலை, மூளாய் ஆகிய இடங்களில் விழுந்து வெடித்தன (13)

## இந்திய விமானப்படை உணவுப்பொதி போடுகின்றன

புயலால் பாதிக்கப்பட்ட பங்களாதேஷிலும் இந்திய விமானப்படையினர் உணவுப் பொதிகளைப் போட ஆரம்பித்துள்ளனர்.

சிட்டங்கொங் மற்றும் டெல்டா பகுதிகளில் நீர் மட்டம் படிப்படியாகக் குறைந்துவருகிறது. இதனால் தற்போது அப்பகுதிகளில் இறந்த அழுகிய சடலங்கள் புலப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது

இதேவேளை பங்களாதேஷில் வீசிய புயலாலும், வெள்ளப் பெருக்கினாலும் சுமார் ஐந்து லட்சம் பேர் பலியானதாகத் தெரிவிக்கப் படுகிறது.

## டைமன்ஸ் சுற்றுப்போட்டி கணேஷ் அணி வெற்றி

டைமன்ஸ் ஸ்போட்ஸ் கிளப் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் கணேஷ் 'பி' பிரிவு அணிக்கும், சென்மேரிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் கணேஷ் அணி ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் கணக்கிலும், ஞானோதய விளையாட்டுக் கழக அணிக்கும் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் அடிப்படையிலும் வெற்றி பெற்றன.

இப் போட்டிகட்கு நடுவர்களாக திரு பீ ஆர். தம்பிநாயகம், திரு ஜீ எம். செயவதியாம் பிள்ளை ஆகியோரும் துணை நடுவர்களாக திரு. எம்.விமலதாஸ், திரு. ஜெனரன்இம்மனுவேல் ஆகியோரும் கடமையாற்றினார்கள். (16)

## முதலுதவி பயில விண்ணப்பிக்கலாம்

யாழ் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் இயங்கும் நல்லூர் சாதனா முதலுதவிப் பிரிவில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

அப்பயிற்சி வகுப்பிற்குக் குறிக்கப்பட்ட தொகையினரே அனுமதிக்கப்பட இருப்பதால் பயிற்சி பெற விரும்புவோர் தங்கள் பெயர்களை சாதனா முதலுதவி நிலையத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது.

## ஓராண்டில் பதவி இழப்பாராம்

சோவியத் தலைவர் கொர்பச்சேவ் ஓராண்டுக்குள் பதவி இழப்பார் என அமெரிக்க உளவு நிறுவனத்தை ஆதாரம் காட்டி நியூஸ் அன்ட் வேர்ல்ட் ரிப்போட சஞ்சிகைகூறுகிறது.

சோவியத்கே ஜி. பி தலைவர் விளாடிமீர் கிரையுச்கோவ் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரே கொர்பச்சேவை விட அதிக தீர்மானங்களை எடுக்கின்றனர் என அச்சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கின்றது.

## இந்திய மக்கள் அவைத்தேர்தல் தமிழகத்தில் 16 பெண்கள்மட்டுமே போட்டி!

தமிழகத்தில் இடம் பெறவுள்ள மக்கள் அவைத் தேர்தலில் மிகக்குறைந்தளவு பெண்களே போட்டியிடவுள்ளனர்.

மக்கள் அவைத் தேர்தலில் தமிழகத்தில் 39 தொகுதிகளில் 461 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் 16 பேர் மட்டுமே பெண்கள்.

## 'மதுவிலும், சூதாட்டத்திலும் நாடு மூழ்கிக் கிடக்கிறது'

எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கு அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் உரிய இடமளிக்காது புறக்கணித்து வருவதால் மக்கள் உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்'.

'நாட்டை எதிர்நோக்கும் சிக்கல்களுக்குத் தீர்வு காணக்கூடிய திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இடையாது. நாடு மதுபானத்திலும், சூதாட்டத்திலும் மூழ்கிக் கிடக்கிறது' என்றும் அவர் சொன்னார்.

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மேதின விழாவில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா பேசுகையில்கூறினார்.

## இந்தியாவின் உணவு உற்பத்தி 18 கோடி 25லட்சம் தொன்னாக அதிகரிப்பு

இந்தியாவின் உணவு உற்பத்தி 1991-92 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 18 கோடி 25 லட்சம் தொன்னாக விருக்குமென நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

நடப்பாண்டு மொத்த உணவு விளைச்சலை விட இது அறுபது லட்சம்தொன் னால் அதிகமானதாகும்.

## மாத்தறையில் கைது

மாத்தறையில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த வட பகுதி இளைஞர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர் முஸ்லிம் பெயரில் தங்கியிருந்ததாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (33)

## வர்த்தமானி தாமதத்தால் விண்ணப்பிக்க முடியவில்லை

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் தாதிகள் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட ஏப்ரல் 5 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி சென்ற வாரம் வந்த லங்காதீப கப்பலிலேயே இங்கு வந்தது.

இந்த விண்ணப்பமுடிவுத்திகதி 30. 4 1991 என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் யாழ்மாவட்டத்திலிருந்து பலர் இந்த வேலைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

இதேபோல கடந்த ஜுன் மாதத்திலிருந்து அரச வர்த்தமானிகள் தாமதமாக வருவதால் பல வேலைகளுக்கு வட பகுதியிலிருந்து விண்ணப்பிக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## இந்தியத் தேர்தல் உத்தி-1
### இந்திரா காங்கிரஸ்:

இந்திரா காங்கிரஸ் குழப்ப நிலையில் இருக்கிறது. 1989 ஆம் ஆண்டு நிகழ்ந்த தேர்தலில் இருந்த நம்பிக்கை இப்போது இல்லை வி பி சிங் மக்கள் முன் மண்டல், மந்திர் ஆகியவற்றை முன்வைத்துள்ளார். இந்திரா காங்கிரஸ் இதற்கு ஒரு சரியான முறிவை, மாற்று வழியை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. இவ்விரண்டு பிரச்சினைகளும் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளன.

ராஜீவ் தான் ஒரு ஸ்திரமான ஆட்சியை இந்தியாவுக்குத் தரக்கூடிய ஒரேபொரு தலைவன் என்ற எண்ணத்தை மக்கள் உள்ளங்களில் ஊடுருவவைக்க இ. கா. முயலுகின்றது. பதவியில் இல்லாமலே மக்கள் கூட்டத்தை இழுக்கும் தன்மை ராஜீவுக்கு உண்டு என இந்திரா காங்கிரஸ் நம்புகிறது. ஆனால மக்கள் கூட்டத்தை மட்டும் வைத்துக்கொண்டு கணிப்புக் கூற முடியாத அரசியல் சூழ்நிலை தற்போது நிலவுகின்றது.

இந்திரா காங்கிரஸ் நான்கு அம்சங்களை அடிப்படையாக வைத்துப் பிரசாரம் செய்கிறது

1. நாட்டிற்கு ஸ்திரத் தன்மையை அளிப்பது.
2. நாட்டின் ஒரே தலைவன் என்று ராஜீவைக் காட்டுவது.
3. அரச பதவிகளில் நண்பர்களுக்குப் பதில் அனுபவமிக்க ஊழியர்களை அமர்த்துவது
4. பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாவலர் வி. பி. சிங் அல்ல ராஜீவ் தான் என மக்களுக்கு வலியுறுத்துவது.

இவையாவும் இ. காவுக்குக் கை, கொடுக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.


## ஓராண்டு நினைவஞ்சலி



### பொன்னுத்துரை இராசரெத்தினம்

தோற்றம்: 14. 03. 1938 மறைவு: 16. 04. 1990

அன்பு பண்பு பாசத்தால் அரவணைத்த அப்பா. ஆண்டு ஒன்று கழிந்தாலும் ஆறவில்லை எம் கண்ணீர் கதியற்றுக் கலங்கும் இக்கடுங்கால வேளைதனில் விரைந்துவந்து காத்திடுவீர் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர்த் துளிகளினால் அர்ச்சிக்கின்றோம்.

அன்னாரின் ஓராண்டு நினைவு நாள் இன்று (06. 05. 1991) அவரது இல்லத்தில் நடைபெறும்.

உம் நினைவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர், சகோதரிகள்.

தகவல்;- மனைவி, மக்கள்

ஆடியபாதம் றோட்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

05015

## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

இயற்கை வளங்கொண்டு முந்தையோர் கண்ட முறையில் தயாரிக்கப்படுவதுநறுமணம்கமழும் நீம் தூபம் சுகவாழ்வுக்கு உதவுகிறது. பைக்கற் ஒன்று ரூ. 1 50 மிக்கி வைற் யாழ்ப்பாணம்.

05027

★ தேர்தல் கூட்டத்தில் ஜனாதிபதி

# சுதந்திரக்கட்சி மொழிக்கொள்கை நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிப் பேராசையினாலேயே இன்று வடக்கு கிழக்கிலிருந்து நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ மாத்தறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி தனது ஆட்சி வெறியினால் மொழிப் பிரச்சினையை நாட்டில் தோற்றுவித்தது. அது இன்று புலிப் பிரச்சினையாக மாறியுள்ளது.

எனினும் நாம் இந்தப்பிரச்சினையைத் தீர்க்க உறுதி கொண்டுள்ளோம். பேச்சுவார்த்தையில் எனக்கு நம்பிக்கையிருப்பதினாலேயே விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## றொட்டரக்ற் கழகம் உதவி

யாழ்ப்பாணம் றொட்டரக்ற் கழகம் தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் புனித பொஸ்கோ மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள 410 அகதிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து தொடர்ந்து ஐந்து தினங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கி வருகின்றது. (16)

## விடுதிகளில் உள்ள தமிழரிடம் பணம் பறிக்கும் கோஷ்டி

கொழும்பில் விடுதிகளில் தங்கியுள்ள வடபகுதி தமிழர்களிடம் சில கும்பல்கள் பணம் சுறக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு செல்வதற்காகவும், வெளிநாடுகளில் உள்ள உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்காகவும் நீண்ட நாட்களாக தங்கியுள்ளவர்களின் நடவடிக்கைகளை அவதானித்து அவர்களைத்தனிமையாக அழைத்து பணம் கேட்கப்படுகிறதாம்.

இவர் அச்சம் காரணமாக அவர்கள் கேட்கும் தொகையில் அரைப்பகுதியை கொடுத்துள்ளதாகவும், சிலர் இடம் மாறி வருவதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. (50)

## வலைப் பந்தாட்டம் 'சுப்பர்ஸ்ரார்' வெற்றி

காவலூர் கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட 'முரசொலி' விளையாட்டுக் கழக அணிக்கும், தெல்லிப்பழை "சுப்பர்ஸ்ரார்" விளையாட்டுக்கழக அணிக்குமிடையில் கடந்த 3 ஆம் திகதி நாரந்தனை மைதானத்தில் நடைபெற்ற இநேசபூர்வ வலைப்பந்தாட்டப் போட்டியில் சுப்பர் ஸ்ரார் அணி 21: 11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஆட்டத் தொடக்கத்தில் முரசொலி அணி வீராங்கனைகள் காட்டிய உத்வேகத்தையும், அணுகு முறையையும் இறுதி நேரத்தில் காட்டத் தவறியதினால் முதற் போட்டியில் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று. (16)

## வினாத்தாள் வந்து சேர்ந்ததும் பரீட்சை மீண்டும் ஆரம்பிக்கும்

வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு இரண்டாம் கட்ட வினாத்தாள்கள் வந்து சேர்ந்ததும் மீண்டும் பரீட்சை ஆரம்பமாகும் எனப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல அறிவித்துள்ளார்.

இன்று முதல் இடைநிறுத்தப்படும் வட, கிழக்குக் க.பொ. த. உயர்தர விசேட பரீட்சை குறுகிய கால அறிவித்தலில் மீண்டும் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு வினாத்தாள்கள் வந்து சேர்ந்ததும் இவ்வறிவிப்பு வெளியிடப்படும்.

## ஐ.நா. மனித உரிமைகள் குழு செப்டம்பரில் இலங்கை வரும்?

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் இலங்கை வரவுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராயவென ஏழு உறுப்பினர்கள் கொண்ட இக் குழு வரவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்பியான மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இக் குழுவினர் வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் செல்லத் திட்டமிட்டுள்ளனர்.

எனினும் ஸ்ரீலங்கா அரசு இக் குழுவினரின் வருகையை உதவி வழங்கும் நாடுகளின் பாரிஸ் கூட்டம் முடிவடையும் வரை பின்போடுவதற்கு முயற்சிப்பதாக மகிந்த ராஜபக்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

## தற்காலிகமாக இயங்குகிறது

வேலணை ப. நோ. கூ. சங்கம் தற்காலிகமாக வாழ் மானிப்பாய் வீதியில் உள்ள கட்டிடமொன்றில் இயங்கி வருகின்றது.

இச் சங்கம் தனது கிளைகள் மூலம் தனது பகுதி மக்களுக்குரிய நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றது. ப 12

## அமெரிக்க ஜனாதிபதி வைத்தியசாலையில்

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் (67) சுவாசம் சம்பந்தமான நோயினால் பீடிக்கப்பட்டு வாஷிங்டன் கடற்படை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரைப் பரிசோதித்த டாக்டர்கள் இவருக்கு இதயக் கோளாறு இருப்பதையும் கண்டறிந்துள்ளனர்.

## தேர்தல் பிரசாரத்துக்கு எம். ஜி. ஆர். வருகிறார்!

தேர்தல் பிரசாரத்துக்கு எம். ஜி. ஆர் வர இருக்கிறார்!

அது எப்படி எம். ஜி. ஆர். வர முடியும் என்று திகைக்காதீர்கள்!

எம். ஜி ஆர். போல வேடம் போட்ட ஒருவர்தான் தேர்தல் பிரசாரத்துக்கு வர இருக்கிறார்!

அவர் பெயர்கூட இராமச்சந்திரன்தான்! இவர் ஒரு துணை நடிகர். இப்பொழுது "காவல் நிலையம்" என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். அந்தப் படத்தில் ஒரு பாடல் காட்சியில் எம். ஜி. ஆர். போல வேடம் அணிந்து பாட்டுப் பாடி நடித்துள்ளார்! அந்தப் பாட்டு

"அந்த இதயக் கனி போல
இங்கே வேறு யாரு - நான்
வாத்தியார் வழிவந்த சிறிய பிள்ளை - அவர்
சொன்னது எல்லாம் மறக்காத நல்லபிள்ளை!!"

இந்த வேடத்தில் இராமச்சந்திரனைப் பார்த்தவர்கள், "அசல் எம். ஜி ஆர். போலவே இருக்கிறாய்!" என்று பாராட்டினார்கள்.

அதன் பேரில், அ. தி. மு. க. சார்பில் தேர்தல் பிரசாரம் செய்ய இவர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்! எம். ஜி. ஆர். வேடத்தில் தேர்தல் பிரசாரம் செய்வார்!!

## தீவக அகதிகளுக்கு பூநகரியில் நிவாரணம்

தீவுப் பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து பூநகரி பள்ளிக்குடா கிராமத்தில் தங்கியிருக்கும் 101 குடும்பங்களுக்கும் பூநகரி கௌதாரி முனையில் தங்கியிருக்கும் 172 குடும்பங்களுக்கும் பூநகரி உதவி அரசாங்க அதிபர் குடும்ப அங்கத்தவர்கள் தொகையினைக் கொண்டு இலவச உலர் உணவு பெறுவதற்கான அனுமதிப்பத்திரங்களினை ஒதுக்கியுள்ளார்.

பூநகரி ப. நோ. கூ. சங்கப் பள்ளிக்குடா கிளை, வீரான் மோட்டை கிளை ஊடாக இவ் அனுமதிப் பத்திரங்களுக்கு அரிசி, சீனி, தேயிலை, கௌபி என்பன நேற்றுத் தொடக்கம் வழங்கப்படுகின்றன. (ப-35)

## பாரதிதாசன் பன் மணித்திரள்

### தமிழ்ப்பற்று

பாரதிதாசன் தமிழைப் பற்றியும் தமிழினத்தைப்பற்றியும் அதிகமாகப் பாடிய கவிஞர்.

"தமிழ் எங்கள் உயிருக்குநேர்"
"தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்"
"உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே"
"தமிழ் எங்கள் உயிர் என்பதாலே— வெல்லும் தரமுண்டு தமிழருக்கிப்புவிமேலே"

என்றெல்லாம் பல இடங்களில் தமிழைத் தம் உயிருக்குச் சமமாகப்பாடியவர் பாரதிதாசன்.

"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனமீன்ற தமிழ் நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்"

என்று சிறப்பாகப் பாடியவர் பாரதிதாசன்.

தமிழின எழுச்சிக்காகத் "தமிழியக்கம்" என்ற தலைப்பிலே நூல் ஒன்றையும் இயற்றியவர். தமிழ் நாட்டில் தமிழ் மொழி எல்லாத்துறையிலும் புறக்கணிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டித் தமிழ் வளர்ச்சிக்கான வழிகளைச் சொன்னவர்.

"தமிழரென்று சொல்லிக்கொள்கின்றோம் நாளும்
தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்புகின்றோம்
எமதென்று சொல்கின்றோம் நாடோறும்தான்
எப்போது தமிழினுக்குக் கையாலான
நமதுழைப்பை ஒரு காசைச் செலவுசெய்தோம்
நாமிதனை என்றேனும் வாழ்நாள் தன்னில்
அமைவாகக்குந்தி நினைத்தோமா இல்லை
அனைவருமிவ் வாறிருந்தால் எது நடக்கும்"

என்று எழுச்சியோடு பாடித் தமிழுணர்வு ஊட்டியவர் பாரதிதாசன்

நீரலையோடு நீராம்பல் என்பது போலத் தமிழ் அளவே யாகும் தமிழர்தம் வாழ்வு என்று எண்ணியவர் பாரதிதாசன்

"செந்தமிழே உயிரே நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேனே
நைந்தாயெனில் நைந்துபோகுமென்வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந்தானே

என்று பாடினார்.

தமிழை உயர்த்தினால் தமிழர் உயர்வார். தமிழைத் தாழ்த்தினால் தமிழர் தாழ்வார். இது தான் பாவேந்தரின் தமிழ்க்கொள்கையாகும்.

"உனக்கு வந்த நலம் எமக்கு வந்ததாகும்
உனக்கு வந்த வெற்றி எமக்கு வந்ததாகும்
தனக்கென வாழ்ந்தது சாவுக் கொப்பாகும்
தமிழுக்கு வாழ்வதே வாழ்வதாகும்

என்பதில் தளராத நம்பிக்கை கொண்டவர் பாரதிதாசன்.

தமிழ்த் தொண்டு பற்றிக் குறிப்பிடும் பாரதிதாசன்
தமிழுண்டு தமிழ் மக்களுண்டு — இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
என்று பாடினார்.

### சீர்திருத்தம்

சமுதாயத்தில் நிலவுகின்ற சாதிமத பேதங்களையும் கண்மூடிப் பழக்கவழக்கங்களையும், மூடநம்பிக்கைகளையும் சாடிப்பாடிய சீர்திருத்தக் கவிஞர் பாரதிதாசன்.

"தாழ்வென்றும் உயர்வென்றும்
சமூகத்தில் பேதம் கொண்டால்
வாழ்வின்பம் உண்டாகுமோ- சகியே
வாழ்வின்பம் உண்டாகுமோ?"

என்று பாடுகின்ற பாரதிதாசன்

"தாழ்வில்லை உயர்வில்லை
சமமென்ற நிலைவந்தால்
வாழ்வெல்லை காண்போமடி"

என்று வழியும் காட்டுகிறார்.

"ஒன்றே சமூகம் என்றெண்ணுங்கள்
பிறவியில் உயர்வு தாழ்வில்லை என்று பேசுங்கள்"

என்றும் பாடுகின்றார்.

### இயற்கை எழில்

இயற்கையை இயற்கையின் அழகுக்காக மட்டுமே பாடுகின்ற புலவர்கள் பலர் உண்டு. ஆனால் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தி இயற்கை இன்பத்தை உணர்ந்து பாடிய ஒரு சில புலவர்களுள் பாரதிதாசன் குறிப்பிடத்தக்கவர். இயற்கைப்பொருள்கள் எல்லாம் தாமேமுன்வந்து தம்மைப் பாடுமாறு பாரதிதாசனிடம் வேண்டுகோள் விடுக்கின்றனவாம்.

"ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான்
ஓடையும் தாமரைப்பூக்களும் தங்களை
ஓவியந்தீட்டுக என்றுரைக்கும்
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்"

புரட்சிக் கவிஞரின் இயற்கைப்பாடல்களில் கற்பனை சிறந்து விளங்குகிறது. பாம்பை விழுதென்று எண்ணித் தொட்டது ஒரு குரங்கு அதுபாம் பென்று அறிந்ததும் அச்சத்தில் மரத்தின் உச்சிக்குப் போய்த் திரும்பிப்பார்க்கின்றது அப்பொழுது அதன் வால் தெரிகிறது. அதுவும் பாம்போ என்று அந்தக்குரங்கு அஞ்சி நடுங்குவதாம்.

"கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்டபிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளை தோறும் குதித்துத் தாவிக்

கீழுள்ள விழுதையெல்லாம்
ஒலிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சி போய்த் தன் வால் பார்க்கும்"

இப்பாடலில் கவிஞரின் கற்பனை மட்டுமன்றி இயல்பான நகைச்சுவையும் மிளிர்கின்றது.

(பாரதிதாசன் நூற்றாண்டு)

## பாராளுமன்ற சம்பிரதாயங்களை நாம் மதிக்கிறோம் - வாசுதேவ

பாராளுமன்றத்தில் வைத்து அரசின் நடவடிக்கைகளை நாம் கண்டிப்பதுடன் எதிர்ப்பும் தெரிவிக்கிறோம் அதனை பாராளுமன்ற சம்பிரதாயத்துக்கு மாறான செயல் என்று அரச தரப்பினர் கூறுகின்றனர்.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சி எம். பியான வாசுதேவ நாணயக்கார கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர். பாராளுமன்றத்திற்கு எம்மை வராமல் செய்ய இப்படி பிரசாரம் செய்யப்படுகிறது எனவும் கூறினார்.

## கைது செய்யச் சென்றபோது பொலிஸ்காரருக்கு கத்திக்குத்து

கொலைக்குற்றம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்யச் சென்ற பொலிஸ்காரரை சந்தேக நபரின் நண்பர் கத்தியால் குத்திய சம்பவம் காலி பொலிஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து சந்தேக நபர் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் படுகாயமடைந்த பொலிஸ்காரர் முதலில் காலி ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு பின்னர் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டார். 38

## ஜோசிம்மின் பொறுப்புகளை மலேஷிய பிரஜை ஏற்றார்

கடந்த மாத இறுதியில் நாடு கடத்தப்பட்ட மலேஷியப் பிரஜையான ரான்னால்ட் ஹவார்ட் என்பவர் பல பெயர்களுடன் நாட்டில் நடமாடித்திரிந்ததாக இரகசிய பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் கஸினோ சூதாட்டத்துக்காக தாய்லாந்திலிருந்து பெண்களை வரவழைத்ததாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாடுகடத்தப்பட்ட சிங்கப்பூர் வாசியான ஜோசிம்மின் சூதாட்டக் குகைகளை இவர் பொறுப்பெடுத்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இன்னும் சில சூதாட்ட விடுதிகள் இயங்குகின்றனவா என பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர். 43

## சம்பளத்தில் மோசடி ஊர்காவல் படைவீரர் கைது

மத்திய மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் பணிபுரியும் ஊர்காவல்படை வீரர் ஒருவர், சக பொலிஸ்காரரின் சம்பளத்தை சம்பளப்பட்டியலில் கையொப்பம் இட்டு பெற முயன்றாராம்.

இவர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

## முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஐ. தே. கவுக்குமாறுகிறார்கள்

இம்மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடும் பல முஸ்லிம் வேட்பாளர்கள் அக்கட்சியிலிருந்து விலகிவருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் ஐ. தே. கட்சியில் சேர்வதாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளனர்.

இதேசமயம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரசாரக் கூட்டங்கள் எதுவும் நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

கடவான...

பதினைந்து நிமிட மோதலையடுத்து இரு ஹெலிகள் தரையிறங்கிச் சென்றன.

இரு தரப்பினரிடையே கடும் மோதல் முடிந்ததும் கடவான கடற்படை முகாமிலிருந்தும் மங்கிபிரிட்ஜ் முகாமிலிருந்தும், கடவான காட்டை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல் நடாத்தினர்.

படையினர் தற்போது கடவான பகுதியில் நிலை கொண்டுள்ளனர். 71

வட கிழக்கு...

வித்தார்.

வடக்குக் கிழக்குப் பாதுகாப்புச் செலவு அதிகாரிப்பதால் திறைசேரி புதிய ஆட்சேர்ப்புக்கு நிதி ஒதுக்குவதற்கு மறுத்துவருகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

இன்னமும்...

எனவும், ஐக்கிய தேசியக்கட்சியை அவர்கள் கூட்டுச்சேர்ந்தும் தோற்கடிக்க முடியாது எனவும் கூறினார்.

முன்னாள்...

விடும் சுயேட்சை வேட்பாளர்களுடன் ஒவ்வொரு நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் சென்று வருகிறார். 33

## ★ வவுனியாவில் ஐ. நா. லொறி தாக்கப்பட்டதற்கு அரசின் பதில் தாமதத்தால்

# உணவு விநியோகம் தடை

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய வாகனம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முடிவு தெரிவிக்க அரசாங்கம் அவகாசம் கேட்டுள்ளதாக ஐ நா. வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த முடிவு அறிவிக்கப்பட்ட பின்னரே மடு அகதிகளுக்குரிய அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இரு வாரங்களுக்குரிய உணவுப் பொருள்களே மடு முகாமில் இருப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் அவை ஒரு சில தினங்களுக்கு மட்டுமே போதுமானது என அவ்வட்டாரங்கள் கூறின.

இதேசமயம் வடக்கு கிழக்குப்பகுதிகளில் உள்ள அகதிகளுக்குரிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ள கொழும்பில் அனுமதி கிடைத்தும் வழிகளில படையினர் இடையூறாக இருப்பதாகத் சில தொண்டர் நிறுவனங்கள் தத்தமது தலைமையகங்களுக்குப் புகார் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 74

## தமிழகத் தேர்தல் களத்தில் ஐயாயிரம் வேட்பாளர்கள்

எதிர்வரும் 26 ஆம் திகதி தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டப் பேரவை, மற்றும் பாராளுமன்ற ஆசனங்களுக்கான தேர்தலில் நான்கு கோடி தமிழக மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.

234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு 2, 834 வேட்பாளர்களும், 39 பாராளுமன்ற தொகுதிகளுக்கு 460 வேட்பாளர்களும் சுயேட்சை வேட்பாளர்களாக 1, 738 பேரும் இம்முறை தேர்தல் களத்தில் நிற்கின்றனர்.

## 'தமிழரின் தாகம்' அறிமுக விழா

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரபல கவிஞர் மு. வே யோ. வாஞ்சிநாதனின் 'தமிழரின் தாகம்' கவிதை நூல் அறிமுக விழா இன்று மாலை 3 மணிக்கு நெல்லியடி வித்தியாலய மகளிர் பிரிவில் நடைபெறவுள்ளது. விழாவில் பல அறிஞர்கள் ஆய்வுரை வழங்கவுள்ளனர்.

## போஸ்ட்டு போஸ்ட் ஆசிரிய இடமாற்றம்

ஆசிரிய இடமாற்றங்கள் இனிப் புதிய திட்டப்படி நடைபெறவுள்ளதாகக் கல்வியமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறினார்.

ஒரு பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர் அந்தப் பாடசாலையில் எந்த வகுப்பிற்குக் கல்வி கற்பிக்கிறாரோ அதே தரத்திற்கு ஒப்பான காலியிடம் அவர் விரும்பும் பகுதிப் பாடசாலையில் ஏற்பட்டால் மட்டுமே 'போஸ்ட் டு போஸ்ட்' என்ற அடிப்படையில் மாற்றம் நடைபெறும் என்றும் அவர் சொன்னார். (33)

## சில பாடசாலைகளே 10 ஆம் திகதி ஆரம்பம்

தற்போது நடைபெற்ற க. பொ. த. உயர்தர விசேட பரீட்சைக்கு மண்டபங்களாக பயன்படுத்தப்பட்ட பாடசாலைகள் இம்மாதம் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படமாட்டாது எனத்தெரியவருகிறது.

ஏனைய பாடசாலைகள் முன்னர் அறிவித்தபோல 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (12)

## போலிதபால் வாக்குச் சீட்டுக்கள் தயாரித்தவர்களும் சிக்கினர்;

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள தபால் மூலமான வாக்குச்சீட்டுக்களைபோலியாகத் தயாரிக்க எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலும், கண்டியிலும் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள ஊழியர்களுக்கு விநியோகிக்கவென அனுப்பப்பட்ட தபால் வாக்குச் சீட்டுக்கள் சில அபகரிக்கப்பட்டு, அவற்றை யொத்ததாகவே இந்தபோலிச் சீட்டுக்கள்வடிவமைக்கப்பட்டதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக சில அரச ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## லொறிகள் தடுத்துவைப்பு

வவுனியாவில் வடக்கு நோக்கி வந்த லொறிகள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. 74

புலிகளின்...

- ★ ரிம - 366
- ★ மினிமினி எல். எம் ஜீ - 1
- ★ மேலதிக சுடு குழல் - 1
- ★ எப்.என். சி துப்பாக்கிகள்-15
- ★ ரவைக் கூடுகள் - 56
- ★ 60 எம். எம் மோட்டார்-1
- ★ ஷெல்கள் - 10
- ★ தொலை தொடர்பு கருவிகள் - 2
- ★ 5. 56 ரவைகள் - 1600
- ★ தொலைகாட்டிகள் - 2
- ★ 40 எம். எம் ஷெல் - 6
- ★ நேட்டோ ரவை - 360
- ★ கை குண்டுகள் - 4
- ★ குண்டு துளைக்கா கவசம் - 2

இம் மோதலில் புலிகள் தரப்பில் 2 - ம் லெப் வினிஸ்டன் (மன்னார்) வீரமரணமடைந்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து இப்பகுதியில் இரு பொம்மர்கள், இரு அவ்ரோக்கள், இரு ஹெலிகள் என்பன மூர்க்கமாக தாக்குதல் நடத்தின,

இச்சம்பவத்தைதொடர்ந்து மாலை 2 மணி முதல் மாலை 4 மணி வரை சிறுசிறுமோதல் சம்பவங்கள் நடந்தன. மாலை 4·30 மணிக்கு மோதல் நடைபெற்ற இடத்துக்கு படையினர் முன்னேற முற்பட்ட போது மீண்டும் புலிகள் தாக்குதலை தொடுத்தனர். இச்சம்பவத்தில் மேலும் சில படையினர் கொல்லப்பட்டனர். இரு சடலங்கள் புலிகளால் மீட்கப்பட்டன. படையினரிடமிருந்து மீண்டும் மினிமினி எல் எம் ஜி-2 எப் என். சி. துப்பாக்கி-1 என்பன கைப்பற்றப்பட்டன.

கோறியகுளம் பகுதி ஓமந்தைக்கும் நொச்சிமோட்டைக்கும் இடைப்பட்ட பிரதேசமாகும். (71)

## யாழ் பயணிகள் வவுனியாவில்

கொழும்பில் இருந்து வடபகுதி நோக்கி வந்த பலர் வவுனியாப் பகுதியில் காத்திருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'மே' தினமன்று கொழும்பில் இருந்து வந்த பயணிகள் வடபகுதி வந்துவிட்டதாகவும் அதற்கு பின்னர் வந்த பயணிகளே வவுனியாவில் 'தவம்' இடப்பதாகவும்கூறப்படுகிறது.

வவுனியாவில் இராணுவ நடவடிக்கைகள் தொடருவதால் சில பயணிகள் மீண்டும் கொழும்புக்குத்திரும்பிச் செல்கின்றனராம் (70)

2 லட்சம்...

இந்த நாடுகளுக்குச் செல்லவுள்ளது.

வளைகுடா யுத்தத்தின் போது நாடுதிரும்பிய இலங்கையர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும் என தொழில் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன 48

ஆற்றுப் -

பத்திரிகைகள் மூலம் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இதனைக் கலைப்பதற்குரிய அதிகாரி ஒருவரையும் அமைச்சு நியமித்துள்ளது 83

## அதிகாரியின் கையொப்பம் வைத்த பொலிஸ்காரருக்கு ரிமாண்ட்

இன்ஸ்பெக்டரின் கையொப்பத்தை ஐந்து தடவைகள் வைத்த பொலிஸ் கொஸ்டபிள் ஒருவரை கண்டி நீதிவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கண்டிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இவர் தனது முக்கிய ஆவணத்தில் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரின் கையொப்பத்தை வைத்து பொலிஸ் சுப்பிரின்டனுக்கு அனுப்பியபோது பிடிபட்டார்.

## யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் விபத்து

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு முன்பாக நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுமோசமான நிலையில் காயமடைந்தார்.

இந்த மோட்டார் சைக்கிளில் மூவர் பயணம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது சைக்கிளுடன் இது மோதியதால் இவ் விபத்து ஏற்பட்டது. 74

## லஞ்சம் வாங்கிய பொலிஸார் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்

தெற்கில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் பணிபுரியும் இன்ஸ்பெக்டர், சார்ஜன்ட் பொலிஸ்காரர் இருவர் லஞ்சக் குற்றச் சாட்டின் மீது ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணை தொடர்பாக ஆதனைச் சரிப்பண்ண பத்தாயிரம் ரூபாவை லஞ்சமாக இவர்கள் பெற்றபோதே கையும் மெய்யுமாக லஞ்சப் பகுதியால் பிடிக்கப்பட்டனர்.

## வன்னிப்பகுதியில் விமானத் தாக்கு

வன்னிப்பகுதியில் தொடர்ந்தும் இடம் பெறும் விமானத் தாக்குதல்களால் அப்பகுதி மக்கள் இடம் பெயருகின்றதாக அங்கிருந்து வருவோர் தெரிவிக்கின்றனர்.

நேற்றும் முல்லைத்தீவு, துணுக்காய், ஓமந்தை பகுதிகளில் வான்தாக்குதல்கள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. 74

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ், (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி 'லஷ்மி'பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 06-05. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.